இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 141 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 15 – ஞாயிற்றுக்கிழமை 31 டிசம்பர் 2023 – சென்னை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 141: Thiruvalluvar Year - 2054 - Margazhi 15- Sunday 31 December 2023 - Chennai 8 Pages ₹ 5.00





நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பான வழக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று ஆளுநர் அவர்களை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் அழைப்பினையேற்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என். ரவி அவர்களை சந்தித்து, நிலுவையில் இருக்கும் பல்வேறு மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று வலியுறுத்தினார். இச்சந்திப்பின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நிலுவையில் உள்ள மசோதாக்கள் – கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்திடுவீர்!

# முதல்வர், ஆளுநரிடம் வலியுறுத்தல்!

**சென்னை, டிச. 31-**

**உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அழைப்பு விடுத்ததையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை சந்தித்து நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தினார்.**

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பப்பட்ட மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருப்பது தொடர்பாக, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டி தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தது.

### முதலமைச்சருக்கு ஆளுநர் அழைப்பு!

அவ்வழக்கில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பாக முதலமைச்சர் அவர்களோடு ஆலோசனை நடத்திட வேண்டுமென்று உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்ததன் அடிப்படையில், ஆளுநர் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

ஆளுநர் அவர்களின் அழைப்பினையேற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) ஆளுநர் மாளிகையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, ஆகியோருடன் ஆளுநரைச் சந்தித்தார்.

> அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் அவர்கள் செயல்பட வேண்டுமென்றும், அப்போதுதான் மாநில மக்களின் நலனுக்கும், நிருவாகத்திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் அவர்களது செயல்பாடு அமையும் என்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

ஆளுநருடனான இச்சந்திப்பின்போது, பல மாதங்களாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் இருக்கும் பல்வேறு கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆளுநரிடம் வலியுறுத்தினார்.

அதேபோன்று, தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த 10 முக்கியமான மசோதாக்களை, அரசியல் சாசனத்தில் எங்கும் குறிப்பிடாத வகையில், தேவையின்றி குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளதைத் திரும்பப் பெற்று, அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திடவும் ஆளுநர் அவர்களை, முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

### அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான புகார்!

ஊழல் வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ள அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள்

கே.சி. வீரமணி மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு தொடர அனுமதி கோரி அனுப்பப்பட்ட கோப்புகளும் பல மாதங்களாக ஆளுநர் வசம் நிலுவையில் உள்ளன. அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் வழங்க இச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது.

இதில் கே.சி. வீரமணி அவர்கள் தொடர்பான கோப்பினை 15 மாதங்களுக்கு மேலாகவும், எம்.ஆர். விஜயபாஸ்கர் அவர்கள் தொடர்பான கோப்பினை 7 மாதங்களுக்கு மேலாகவும் ஆளுநர் அவர்கள் நிலுவையில் உள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் காலியாக உள்ள உறுப்பினர் பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பான கோப்பும், நீண்ட காலமாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டு அவற்றிற்கு ஒப்புதல் அளித்து திரும்ப அனுப்பி வைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

பொதுவாக, அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் அவர்கள் செயல்பட வேண்டுமென்றும், அப்போதுதான் மாநில மக்களின் நலனுக்கும், நிருவாகத்திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் அவர்களது செயல்பாடு அமையும் என்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

### தாமதங்களை தவிர்த்திடுவீர்!

ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பாக அவர் கோரிய அனைத்து விவரங்களும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களால் ஆளுநர் அவர்களுக்கு நேரிலும், எழுத்துப்பூர்வமாகவும் அளிக்கப்பட்டுள்ள நிலையில், உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துக்களை ஆளுநர் அவர்கள் மனதில்கொண்டு, நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கும், கோப்புகளுக்கும் உரிய காலத்தில் ஒப்புதல் வழங்கிட வேண்டுமென்றும், வருங்காலங்களில் இதுபோன்ற தாமதங்களை ஆளுநர் அவர்கள் தவிர்த்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆலோசனையின் போது, அரசின் சார்பாக மேற்படி கருத்துக்களை முதலமைச்சரும், அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் விரிவாக எடுத்துக் கூறினர்.

### உயர் அமைப்புகள் மீது மதிப்பும், மரியாதையும்!

முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு கடிதம் ஒன்றையும் அப்போது வழங்கினார். இக்கடிதத்தில் அரசியல் சாசனத்தின்படி அமைக்கப்பட்டுள்ள அனைத்து உயர் அமைப்புகளின்மீதும் தனக்கு மிக உயர்ந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் குறித்து தெரிவித்தது, மாநில நிர்வாகம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அவற்றிற்கு விரைந்து ஒருதீர்வுகிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில்தான் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

## கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி செலவில் - இந்தியாவிலேயே மிகப்பெரிய அளவில்

# கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**செங்கல்பட்டு, டிச.31-**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (30.12.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 393.74 கோடி ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவிலேயே மிகப் பெரிய பேருந்து முனையமான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” திறந்து வைத்தார்.**

**மேலும், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்தார்.**

அதன் விபரம் வருமாறு:–

சென்னை, கோயம்பேடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் நோக்கில், தெற்கு நோக்கிச் செல்லும் பேருந்துகளுக்காக செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரை அடுத்த கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் புதிய புறநகர்ப் பேருந்து முனையம் அமைத்திட தமிழ்நாடு அரசால் அறிவிப்பு வெளியிடப்பட்டது.

### 6 லட்சம் சதுரஅடி பரப்பளவில் கட்டடங்கள்!

அதன்படி, அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய புறநகர்ப் பேருந்து முனையக் கட்டுமானத்திற்காக சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு நிலம் மாற்றப்பட்டு, தொடர்புடைய அனைத்துக் கட்டுமானம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டன.

**கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனை யத்தில், 6 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கட்ட டங்கள் அமைக்கப் பட்டுள்ளன. அதில் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக (SETC) மற்றும் தமிழ்நாடு மாநிலப் போக்குவரத்துக் கழகப் (TNSTC) பேருந்துகளுக்கு 8 தொகுதிகளைக் கொண்ட 215 பேருந்து பாந்துகளும் (Bus Bays), இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு இரண்டடுக்கு அடித்தள நிறுத்துமிட வசதியும் உள்ளன.**

**சென்னையிலிருந்து கிளாம்பாக்கம் வரை மாநகரப் பேருந்துக் கழகப் (MTC) பேருந்துகளை இயக்குவதற்கென 7 ஏக்கர் பரப்பளவில் 60 பேருந்துகள் நிறுத்தும் வசதியுடன், மாநகரப் பேருந்துக் கழக முனையம், ஜி.எஸ்.டி. சாலையையொட்டி அமைக்கப்பட்டுள்ளது.**

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 393.74 கோடி ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப் பெரிய பேருந்து முனையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” திறந்து வைத்து, பேருந்து சேவையினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங்கவிதைகளின் பெருந்தொகுப்பு!

# கவிப்பேரரசு வைரமுத்துவின் ‘மகா கவிதை!’

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நாளை வெளியிடுகிறார்!



**சென்னை, டிச. 31-**

**கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான ‘மகா கவிதை’ நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை (ஜனவரி 1 ஆம் தேதி) வெளியிடுகிறார்.**

**சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு விழா நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.**

‘மகா கவிதை’ என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதைநூல்.

“அகவியல் - புறவியல் - அறவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க் கவிதை முதன்முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்து விடும்” என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.

### ரூ.5 லட்சம் பரிசு!

‘மகா கவிதை’ என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு - என்று கவிப்பேரரசு வைரமுத்து ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசு பெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான ‘சூர்யா இலக்கியம்’ இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.


# பயண ஆலோசனை - MTC பேருந்து சேவைகள் KCBT, கிளாம்பாக்கம்

SETC, TNSTC, PRTC, மற்றும் தனியார் பேருந்துகள் (ஆம்னி) ஆகியவற்றின் தெற்கு நோக்கி செல்லும் பேருந்துகளுக்காக, கோயம்பேட்டில் உள்ள சென்னைப் புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து கிளாம்பாக்கத்தில் உள்ள புதிய கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திற்கு பேருந்துச் செயல்பாடுகள் மாற்றப்பட உள்ளது. SETC மற்றும் ஆம்னிபஸ்களின் செயல்பாடுகள் உடனடி நடைமுறையுடன் தொடங்கும், அதே நேரத்தில் TNSTC மற்றும் PRTC பொங்கலுக்குப் பிறகு தொடங்கும்.

சென்னையில் உள்ள பல்வேறு நிறுத்தங்களில் இருந்து முனையத்திற்கும், அதற்கு நேர்மாறாக பெரும் போக்குவரத்து நேரத்தின் போது பயணிகளின் பயணத்தை எளிதாக்க, பின்வரும் அட்டவணையின்படி MTC-ஆல் சீரான இடைவெளியில் ஷட்டில் (Shuttle) சேவைகள் இயக்கப்படும். பல்வேறு அலைவரிசைகளில் பேருந்துகள் போதுமான இடைவெளியில் மற்ற வழித்தடங்களில் இயக்கப்படும்.

சராசரி பேருந்து இடைவெளிகள் - முக்கிய வழிகள்

| வழிகள் | 70V, 70C, 104CCT | 55V, M18 | 18ACT |
|---|---|---|---|
| நேரம் | கோயம்பேடு | தாம்பரம் | கிண்டி |
| காலை 4:00 - காலை 10:00 மணி | 5 நிமிடம் | 3 நிமிடம் | 3 நிமிடம் |
| காலை 10:00 - மாலை 4 :00 மணி | 15 நிமிடம் | 5 நிமிடம் | 10 நிமிடம் |
| மாலை 4 :00- இரவு 10:00 மணி | 5 நிமிடம் | 2 நிமிடம் | 3 நிமிடம் |
| இரவு 10:00- காலை 4:00 மணி | 15 நிமிடம் | 8 நிமிடம் | 15 நிமிடம் |

உதவி எண்கள்

| விவரம் | எண்கள் |
|---|---|
| ஒருங்கிணைந்த கட்டணமில்லா உதவி எண் (MTC/ SETC / TNSTC) | 149 |
| CMDA உதவி எண் - சிற்றிடைப் போக்குவரத்து | 7845700557 / 7845727920 |
| CMDA உதவி எண் - பொது | 7845740924 / 7845764345 |

சராசரி பேருந்து இடைவெளிகள்- இரவு வழிகள்

| வழிகள் | தொடக்கம் / சேருமிடம் | சராசரி இடைவெளிகள் |
|---|---|---|
| 70C, 70V | கோயம்பேடு | 15 நிமிடம் |
| 91, 95, 91K, 95K | தாம்பரம் | 8 நிமிடம் |
| 51X, 91R | திருவான்மியூர் | 15 நிமிடம் |
| 515T | பூந்தமல்லி | 15 நிமிடம் |
| 583K | கூடுவாஞ்சேரி | 15 நிமிடம் |
| 66KCT | வடபழனி | 15 நிமிடம் |

சராசரி பேருந்து இடைவெளிகள்- பிற வழிகள்

| வழிகள் | தொடக்கம் / சேருமிடம் | சராசரி இடைவெளிகள் |
|---|---|---|
| 18A, 21G | பிராட்வே | 10 நிமிடம் |
| 91, 95, 91K, 95K | திருவான்மியூர் | 8 நிமிடம் |
| 51A, 51AX,V51X | தி.நகர் | 10 நிமிடம் |
| 66P | பூந்தமல்லி | 10 நிமிடம் |
| 166X | ஐயப்பன்தாங்கல் | 8 நிமிடம் |

விரிவான பயண ஆலோசனைக்கு QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்

மேலும் விவரங்களுக்கு “சென்னை பஸ்” செயலியைப் பயன்படுத்த பயணிகள் QR குறியீட்டை ஸ்கேன் செய்யலாம்.

செ.ம.தொ.இ/1465 /வரைகலை/2023









புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச.31-

**புதுக்கோட்டை மாவட்டம் நமணச முத்திரம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தின ருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள் ளார்.**

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, நமணசமுத்திரம் அருகே திருச்சி - காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று (30.12. 2023) அதிகாலை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து மூன்று வெவ்வெறு நான்கு சக்கர வாகனங்களில் வெவ்வேறு கோவிலுக்கு சென்றுக் கொண்டிருந்தவர்கள். தேநீர் அருந்துவதற்காக சாலையோரத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு தேநீர் அருந்திகொண்டிருந்தபோது, சிமெண்ட் ஏற்றி கொண்டு வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக் கோட்டை தாலுக்கா, பனஞ்சேரியை சேர்ந்த ஜெகநாதன் (வயது 60) த/பெ.பாலன் மற்றும் திருமதி. சாந்தி (வயது 55), க/பெ.சீனிவாசன், திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில், எல்லையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கோகுலகிருஷ்ணன் (வயது 26) த/பெ.ராமநாதன் மற்றும் சென்னை மாவட்டம், அமைந்தகரையைச் சேர்ந்த சதீஷ் (வயது 25) த/பெ. சக்திவேல் ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல், பாக்யலட்சுமி நகர், அன்னை இந்திரா காந்தி தெருவைச் சேர்ந்த சுரேஷ் (வயது 39), த/ப.ஜெயராமன் என்பவர் புதுக் கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

# தலைமைக் கழக அறிவிப்பு!

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் நிவாரணப் பணிகள் நடைபெற்று வருவதால், **ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து வாழ்த்துப் பெற வருவதை,** அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் **கட்டாயம் தவிர்க்குமாறு** கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## பெருமழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாவட்ட மக்களுக்கு

# ரூ.1,000 கோடியில் நிவாரணத் தொகுப்பு!

## புதிய வீடுகள் - தொழில் கடன் - பயிர்ச்சேத பாதிப்புக்கு நிவாரணங்கள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, டிச. 31-

டிசம்பர் 17 மற்றும் 18, 2023 ஆகிய நாட்களில் தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் பெய்த கன மழையின் காரணமாக பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அதில் தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்டன. வெள்ளம் பாதித்த பகுதிகளில் முதலமைச்சர் அவர்கள் கடந்த 21.12.2023 அன்று ஆய்வுகள் மேற்கொண்டு பொது மக்களைச் சந்தித்து ஆறுதல் கூறினார்.

மேலும், அமைச்சர் பெருமக்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே. எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, உதயநிதி ஸ்டாலின், திருமதி.பி.கீதாஜீவன், அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, த.மனோ தங்கராஜ் ஆகியோர் உடனடியாக பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார்கள்.

அதேபோல் 10க்கும் மேற்பட்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் மேற்குறிப்பிட்ட மாவட்டங்களுக்கு வெள்ள நிவாரணப் பணிகளை துரிதப்படுத்திட அனுப்பிவைக்கப்பட்டனர்.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, மேற்கொள்ளப்பட்ட மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அடிப்படை வசதிகள், குறிப்பாக குடிநீர் மற்றும் மின்சார வசதி வெகுவிரைவில் சரிசெய்யப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சாலைகள் தற்காலிக அடிப்படையில் சரிசெய்யப்பட்டு பொதுமக்கள் போக்குவரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட தூய்மைப் பணியாளர்கள் மற்றும் மின் துறை, நகராட்சித் துறைப் பணியாளர்கள் ஒருங்கிணைந்து பணியாற்றி பாதிக்கப்பட்ட பகுதிகளின் இயல்பு நிலைக்குக் கொண்டுவர தீவிரமாகக் களப் பணியாற்றினார்கள்.

**அரசாணை வெளியீடு!**

இந்தச் சூழ்நிலையில், கடந்த 21.12.2023ஆம் தேதி அன்று தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் பயணம் மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவது குறித்து முக்கியமான அறிவிப்புகளை வெளியிட்டிருந்தார்கள். அதற்கான அரசாணை நேற்று வெளி யிடப்பட்டது.

வரலாறு காணாத வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளுக்குக் கூடுதலாக, அவர்களுடைய பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நேற்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு பிரிவினருக்குத் தேவையான உதவிகள் பட்டியலிடப்பட்டு அதற்கான தீர்வுகள் காணப்பட்டன.

அதன் விவரம் பின்வருமாறு:-

**சேதமடைந்த வீடுகளுக்குப் பதிலாக புதிய வீடுகள் மற்றும் பழுது பார்த்தல் - ரூ.385 கோடி**

(அ) திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் பகுதியாக சேதமடைந்த வீடுகளை பழுது பார்ப்பதும், முழுமையாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாகக் கட்டித் தருவதும் அரசின் தலையாய கடமை என்பதை கருத்திற்கொண்டு வீடுகள் பழுது பார்ப்பதற்கும், முழுமையாக கட்டித்தருவதற்கும் அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) ஊரக வளர்ச்சித் துறை மூலம் முழுவதுமாக சேதமடைந்த வீடுகளை மீண்டும் புதிதாகக் கட்டுவதற்கு ரூ.4 இலட்சம் வழங்கிடவும், பகுதி சேதமடைந்த வீடுகளுக்கு தலா ரூ. 2 இலட்சம் வரை வழங்குவது எனவும் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் மூலம் மொத்தம் 385 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 4577 புதிய வீடுகள் கட்டப்படும் மற்றும் 9975 வீடுகளுக்கு பழுது நீக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் முழுவதும் மாநில அரசு நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கான வழிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

**பயிர்ச்சேத நிவாரணம் - ரூ.250 கோடி!**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி உள்ளிட்ட புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 8 மாவட்டங்களில் சுமார் 2,64,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிர் சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்கென இழப்பீட்டு நிவாரணம் மொத்தம் 250 கோடி ரூபாய் வழங்கப்படும். பயிர் சேதம் நேரிட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பயிர்க் கடனும் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கும் கடன் வழங்கப்படும்.

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்ட கடுமையான வெள்ளத்தினால் இம்மாவட்டங்களில் விவசாய நிலங்களில் வெள்ளத்தால் அடித்து வரப்பட்ட மண் படிந்துள்ளது. இதனை அகற்றி மீண்டும் விவசாயத்திற்கு ஏற்றவகையில் சீர்செய்துதரும் பணி மாநில வேளாண்மைப் பொறியியல் துறையின் மூலமாக கட்டணமின்றி மேற்கொள்ளப்படும், இதற்கென வெளி மாவட்டங்களிலிருந்து தேவையான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வரவழைக்கப்படும்.

**சிறு வணிகர்களுக்கு ரூ.1 இலட்சம் வரை கடன்!**

இந்த பெருமழையின் காரணமாக சென்னை, தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் சிறு வணிகர்கள் பெரிய பாதிப்பைச் சந்தித்துள்ளனர். அரசு அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டவேண்டிய அவசரத் தேவையைக் கருத்தில் கொண்டும், உள்ளூர் பொருளாதாரத்தில் அவர்களது பங்களிப்பை அறிந்தும் அதன் அடிப்படையில் சிறு வணிகர்கள், சிறு கடை உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளின் கடன் தேவைகளை நிவர்த்தி செய்ய இந்த கடன் வழங்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் சிறு வணிகர்கள் மற்றும் சிறு கடை உரிமையாளர்கள் மற்றும் தெருவோர வியாபாரிகளுக்கு ரூ.10,000 வரை 4 சதவீத வட்டி, ரூ.1 இலட்சம் வரை 6 சதவீத வட்டி வீதத்தில் கடன் வழங்கப்படும். இதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

**தொழில் நிறுவனங்களுக்கான ரூ.3 இலட்சம் வரை கடனுதவித் திட்டம்!**

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருநெல்வேலி, மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி மற்றும் சேவை சார்ந்த தொழில் நிறுவனங்கள், தங்கள் வணிகத்தை மீண்டும் புதுப்பிக்கத் தேவையான மூலதனச் செலவு மற்றும் நடைமுறை மூலதனம் போன்ற அத்தியாவசிய செலவுகளுக்கு நிதியுதவி அளித்திட, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் (TIIC) மூலம் "குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான வெள்ள நிவாரணக் கடனுதவித் திட்டம்" என்ற சிறப்புத் திட்டம் தொடங்கப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், மேற்கூறிய மாவட்டங்களில் வெள்ளம் பாதித்தப் பகுதிகளில் அமைந்துள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.100 கோடி கடனாக வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ், தொழில் நிறுவனங்களுக்கு அதிகபட்சமாக ரூ.3 இலட்சம் வரை, ஆண்டுக்கு 6% சிறப்பு சலுகை வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கப்படும். இக்கடனை தொழில் நிறுவனங்கள் 3 மாத கால அவகாசத்துடன் 18 மாத தவணைகளில் திருப்பிச் செலுத்தலாம். இத்திட்டத்தின் மூலம் சுமார் 3300 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பயனடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



**மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.350 கோடி கடன்!**

இந்த இயற்கைப் பேரிடரினால் பொருளாதார நடவடிக்கைகள் பெரிதும் பாதிப்படைந்து உள்ளதால், சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களைச் சார்ந்த மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் கடன் திருப்பம் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய நிலையைக் கருத்திற்கொண்டு புயல், வெள்ளம் பாதித்த மாவட்டங்களில் கடன் பெற்றுள்ள சுய உதவிக் குழுக்கள் நிவாரணக் கடன் தவணை மற்றும் வட்டியைத் திருப்பி செலுத்துவதற்கும் அவர்கள் பெற்றுள்ள கடனை மறுசீரமைப்பும் செய்துதரப்படும். மாநில மற்றும் மாவட்ட அளவிலான வங்கியாளர் குழுக் கூட்டத்தில் இதனை செயல்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வியாபாரம் / குறு சிறு தொழில் புரியவும், ஏற்கெனவே உள்ள பொருளாதாரச் சொத்தை சரி செய்யவும் / அல்லது புதிய சொத்தை உருவாக்கவும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு இந்தத் தருணத்தில் கடன் உதவி மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்டுள்ள சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில், நடப்பு ஆண்டில், கடன் பெறத் தகுதி வாய்ந்த மகளிர் 4,000 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.350 கோடி அளவில் அவர்களுக்கு புதிய கடன்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**கடன் தவணைகளுக்கு கால நீட்டிப்பு!**

பெருமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலுவையிலுள்ள கடன் தவணைகளை செலுத்திவதில் கால நீட்டிப்பு குறித்து மாநில அளவிலான வங்கியாளர் குழுவில் விரைவில் உரிய முடிவெடுக்கப்படும்.

**சேதமடைந்த மீன்பிடி படகுகளுக்கு நிவாரணம் - ரூ.15 கோடி!**

பெருமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாட்டங்களில் 4928 மீன்பிடி படகுகளும், இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன. இதற்கென நிவாரணத் தொகையாக 15 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**கால்நடைகள் வாங்குவதற்கு கடன்!**

பெருமழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களில் சுமார் 17,000 கால்நடைகளும் 1 இலட்சத்திற்கும் மேல் கோழிகளும் உயிரிழந்தன. இறந்த கால்நடைகளுக்கு நிவாரணமாக பசு, எருமைக்கு 37,500 ரூபாய் வரையிலும், ஆடு, செம்மறி ஆடு ஒன்றிற்கு 4,000 ரூபாய் வரையிலும், கோழி ஒன்றிற்கு 100 ரூபாய் வரையிலும் வழங்கப்படும். கால்நடை இழப்பினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புதிய கால்நடைகளை வாங்கிட வசதியாக ரூ.1.50 இலட்சம் வரை புதிய கடன் வழங்கப்படும்.

**உப்பளத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை - ரூ.3000**

பெருமழை மற்றும் வெள்ளத்தின் காரணமாக பாதிக்கப்பட்ட உப்பளத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட உப்பளத் தொழிலாளர்களுக்கு கூடுதல் வாழ்வாதார நிவாரணத் தொகை தலா ரூ.3000 வழங்கப்படும்.

**பள்ளி மற்றும் கல்லூரிச் சான்றிதழ்கள் பாடப் புத்தகங்கள் வழங்குதல்!**

(அ) வெள்ளத்தின் காரணமாக தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மாணவ, மாணவியர்களின் பள்ளி மற்றும் கல்லூரிச் சான்றிதழ்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு இருக்கலாம் அல்லது சேதமடைந்து இருக்கலாம். அவர்களுக்குப் புதிய சான்றிதழ்களை வழங்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. சான்றிதழ்களை இழந்த மாணவர்கள், அவர்கள் படித்த பள்ளியில் விண்ணப்பம் எழுதிக் கொடுத்தால் அவர்களுக்கு அந்த பள்ளித் தலைமை ஆசிரியர் / கல்லூரி முதல்வர் மூலமாக புதிய மாற்றுச் சான்றிதழ் வழங்குக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அதேபோல், பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர் பாடப் புத்தகங்களை இழந்திருக்கிறார்கள். அவர்களுக்கு புதிய பாடப்புத்தகங்கள் அவர்கள் படிக்கும் பள்ளியின் மூலமாக வழங்கப்படும். இது பாதிப்புக்குள்ளான அனைத்து அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்கும் பொருந்தும். தனியார் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் தேவைக்கேற்ப அவர்களுக்கும் புத்தகங்கள் வழங்கப்படும்.

**வருவாய்த் துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் வழங்குதல்**

வருவாய்த் துறை மற்றும் இதர அரசுத் துறைகளில் வழங்கப்படும் சான்றிதழ்கள் / ஆவணங்கள், குடும்ப அட்டை, வாகன ஓட்டுநர் உரிமம், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்ற அரசு ஆவணங்களை இந்த மழை வெள்ளத்தால் இழந்தவர்கள் புதிய ஆவணத்தை பெறுவதற்கு சிறப்பு முகாம்கள் அந்தந்த மாவட்ட ஆட்சியர்களால் வரும் திங்கள்கிழமை தோறும் துவங்கப்படும்.

**பழுதடைந்த வாகனங்களுக்கான காப்பீடு!**

தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காப்பீட்டு நிறுவனங்களும், வாகன தயாரிப்பு நிறுவனங்களும், முகவர்களும் சிறப்பு முகாம்கள் நடத்தி தங்களது சேவைகளை துரிதப்படுத்திட தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன் அடிப்படையில் வாகன பழுது பார்ப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரையில் 3,046 மோட்டார் வாகனங்கள் பழுதுபார்ப்பு பணிகளுக்காக கொண்டுவரப்பட்டு அவற்றில் 917 வாகனங்கள் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2,129 வாகனங்களுக்கான பழுதுபார்ப்புப் பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்:

## முதல்வர் திறந்து வைத்தார்! ... முதல் பக்கத் தொடர்ச்சி

**மாநகரப் பேருந்துக் கழக முனையத்திலிருந்து (MTC) பிரதான முனையத்திற்குச் செல்லும் பயணிகளுக்கு, இயங்குபடிகள் மற்றும் மின்தூக்கிகளுடன் கூடிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.**

இப்பேருந்து முனையத்தில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழக மற்றும் அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் முனையக் கட்டடத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கு குறைந்தளவு உயரம் கொண்ட பயணச்சீட்டு பெறுமிடங்கள், தொடு உணர் தரைப்பகுதி, மின்கலன் மூலம் இயக்கப்படும் கார்கள், சக்கர நாற்காலிகள் மற்றும் தனி கழிவறைகள் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

**மருத்துவ மையம் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் அடங்கியுள்ளது!**

மேலும், தாய்மார்கள் குழந்தைகளுக்கு பாலூட்டிட அறைகள், தரை தளத்தில் 53 கடைகள் மற்றும் 2 உணவகங்கள் / துரித உணவு மையம் மற்றும் முதல் தளத்தில் 47 கடைகள் மற்றும் 2 உணவகங்கள் / துரித உணவு மையம், ஏ.டி.எம். வசதி, தனி மருத்துவமனை மற்றும் இலவச மருத்துவ மையம், போக்குவரத்து அலுவலகம், நேரக் குறிப்பாளர் அலுவலகம், ஆண்கள், பெண்கள் மற்றும் திருநங்கை களுக்கான கழிவறைகள், குடிநீர் வசதி, மின்விசிறி கள், இருக்கைகள், சூழல் வரைபடங்கள் வசதியுடன் பேருந்து நிறுத்துமிட அமைப்பு போன்ற அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

இம்முனையத்தில் பயணிகளுக்காக 100 ஆண்கள், 40 பெண்கள் மற்றும் 340 ஓட்டுநர்களுக்கான படுக்கை வசதி கொண்ட ஓய்வறைகள் (Dormitory) ஏற்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் 2 நகரும் படிக்கட்டுக்கள் (Escalators), பயணிகளுக்கான 8 மின்தூக்கிகள் (Lifts) மற்றும் 2 சரக்குகளை ஏற்றி இறக்குவதற்கான மின்தூக்கிகள் (Service Lifts) அமைக்கப்பட்டுள்ளன. இரண்டு அடித்தளங்களில் 2,769 இரு சக்கர வாகனங்கள் மற்றும் 324 இலகு ரக வாகன நிறுத்தும் வசதிகள், நீர் வழுங்கல், மின்சாரம் மற்றும் தீயணைப்பு, அடித்தள காற்றோட்டம், முக அடையாளம் காட்டும் கேமராக்கள் (Face Recognition Camera) போன்றவற்றின் ஒருங்கிணைந்த செயல்பாடுகளைக் கண்காணிப்பதற்காக ஒருங்கிணைந்த கட்டட மேலாண்மை அமைப்புமுறை (Integrated Building Management System) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

11 KV/433 V மின்மாற்றும் திறன் கொண்ட 2000 KVA மின் மாற்றிகள் மற்றும் மின் ஆக்கி களுடன் (Generator) கூடிய துணை மின் நிலையம் மற்றும் இதர மின் கட்டமைப்பு வசதிகள், 9 கழிவறை தொகுதிகளை (Toilet Blocks) தூய்மையாக்கவும், செடிகளுக்கு நீர் பாய்ச்சவும் சுத்திகரிக்கப் பட்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் நாளொன்றுக்கு 650 கி.லி. கொள்ள ளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பேருந்து முனையமானது 5 தரை சுத்தம் செய்யும் இயந்திரங்கள், ஒரு இயந்திர துடைப்பான் மூலம் நாள் தோறும் சுத்தமாக பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகள் வெளியேற வசதி!**

பேருந்து முனைய கட்டுமானப் பணிகள் அல்லா மல் ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகள் வெளியேறுவதற்காக பிரத்யேக சாலை விரிவாக்க வசதி மற்றும் பேருந்து முனையத்தின் முன்புறம் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தூய்மையாக்கவும், செடிகளுக்கு நீர் பாய்ச்சவும் சுத்திகரிக்கப்பட்டு மீண்டும் பயன்படுத்தக்கூடிய வகையில் நாளொன்றுக்கு 650 கி.லி. கொள்ள ளவுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், பேருந்து முனையமானது 5 தரை சுத்தம் செய்யும் இயந்திரங்கள், ஒரு இயந்திர துடைப்பான் மூலம் நாள் தோறும் சுத்தமாக பராமரிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகள் வெளியேற வசதி!**

பேருந்து முனைய கட்டுமானப் பணிகள் அல்லாமல் ஜி.எஸ்.டி. சாலையில் போக்குவரத்து நெரிசலின்றி பேருந்துகள் வெளியேறுவதற்காக பிரத்யேக சாலை விரிவாக்க வசதி மற்றும் பேருந்து முனையத்தின் முன்புறம் மழைநீர் வடிகால்வாய் கட்டும் பணி ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இப்பேருந்து முனையத்தில் பயணிகளின் குடிநீர் வசதிக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் (TWAD) மூலம் நாளொன்றுக்கு 0.5 மில்லியன் லிட்டருடன் கூடுதலாக நிலத்தடி நீரை சுத்திகரிக்கும், 300 கிலோ லிட்டர் கொள்ளளவுள்ள எதிர் சவ்வூடுபரவல் (RO) முறையிலான நீர் சுத்திகரிப்பு நிலையம், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (SETC) / தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (TNSTC) மற்றும் மாநகர போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் (MTC) செயல்பாட்டிற்காக தனியாக பேருந்து பராமரிப்புப் பணிமனை/ பராமரிப்பிடங்கள் மற்றும் எரிபொருள் நிரப்பும் நிலையங்கள், மூத்த குடிமக்கள், நோயாளிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் பயன்பாட்டிற்காக 5 மின்கல ஊர்தி (Battery Operated Vehicles) வசதி செய்யப்பட்டுள்ளது. முனையத்தின் முகப்பில் 6 ஏக்கர் பரப்பளவில் நீரூற்றுகளுடைய நடைபாதைகள் கொண்ட பூங்கா, பயணிகளின் அவசர மருத்துவ சிகிச்சைக்காக இலவச மையம் அமைக்கப்பட்டுள்ளதுடன் முனையத்தின் முகப்பில் ஆட்டோ / டாக்ஸி நிறுத்தத்திற்கு தனியாக இடமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**புதிதாக புறநகர் ரயில் நிலையம்!**

இப்பேருந்து முனையத்திற்காக புதிதாக பிரத்யேகமான ஒரு புதிய புறநகர் இரயில் நிலையம் அமைக்கவும், இதிலிருந்து பேருந்து முனையத்தை இணைக்கும் வகையில் ஆகாய நடைபாதை (Skywalk) வாயிலாக இணைப்பதற்கான ஆரம்பகட்ட பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மேலும், புறநகர் பேருந்து முனையம், இந்திய தொல்லியல் துறை (ASI) நிலங்களுக்கு அருகாமையில் அமைந்திருப்பதால், 16 ஏக்கர் நிலப்பரப்பில் தொல்லியல் அறிவுசார் மையம் மற்றும் காலநிலைப் பூங்கா (Archaeological Interpretation Centre & Climate Park), நடைபாதை, விளையாட்டு மைதானம், மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த பூங்கா அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

மேலும், இப்பேருந்து முனையத்தில் புதியதாக காவல் நிலையம், இந்த முனையத்திலிருந்து 7 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள சென்னை வெளிவட்டச் சாலை முடிச்சூர், வரதராஜபுரம் பகுதியில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் அனைத்து கட்டமைப்பு வசதிகளுடன் ஆம்னி பேருந்து நிறுத்துமிடம் (Idle Parking) அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றன.

**பேருந்து சேவையை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!**

இந்த நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் அவர்கள் "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை" திறந்து வைத்து, பேருந்து சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இப்பேருந்து முனையத்தில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான அனுமதி ஆணையினை மாற்றுத்திறனாளி பயனாளி ஒருவருக்கு வழங்கி, கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தின் சிறப்பினை விளக்கிடும் காணொலிக் காட்சியினைப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில், கழகப் பொருளாளரும் நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே. சேகர் பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி.வரலட்சுமி மதுசூதனன், தாயகம் கவி, இ. கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, அ. வெற்றியழகன், எஸ்.எஸ். பாலாஜி, ஜோசப் சாமுவேல், எஸ். சுதர்சனம் மற்றும் இதயவர்மன், தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி வசந்தாகுமாரி, துணை மேயர் ஜி. காமராஜ், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க. பணீந்திர ரெட்டி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர. ராகுல்நாத், தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் நேற்று (30.12.2023) அடையாறு மண்டலம், தரமணி 100 அடி சாலையில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேளச்சேரி சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், கூடுதல் ஆணையர் (சுகாதாரம்) சங்கர்லால் குமாவத், பொது சுகாதார குழு தலைவர் டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறை இயக்குநர் மரு. செல்வவிநாயகம், கூடுதல் மாநகர நல அலுவலர் டாக்டர் லட்சுமி, மாமன்ற உறுப்பினர் எஸ்.பாஸ்கரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### எழும்பூர் தொகுதி கே.பி.பார்க் திட்டப் பகுதியில்

# 3.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டப் பணிகள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார்!

*சென்னை, டிச. 31-*

எழும்பூர் தொகுதிக் குட்பட்ட கேசவ பிள்ளை பூங்கா (K.P.Park) நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்கு மாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடந்த நிகழ்வில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி மரக்கன்றுகளை நட்டு, பின்பு அக்குடியிருப்பு வளாகத்தில், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலை நீர் தேக்கத் தொட்டி, சிறு கடைகள், சுற்றுச்சுவர், நடைபாதை ஆகியவை அமைத்தல் மற்றும் பழுதடைந்த குடிநீர்க் குழாய்களைச் சரி செய்தல் உள்ளிட்ட 3.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாட்டுப் பணிகளுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்டப் பிரதிநிதியும் முன்னாள் வட்டச் செயலாளருமான கமலக்கண்ணன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, பகுதிப் பிரதிநிதி ஏ.யு.மணிவண்ணன், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ். குமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் கலையரசன், அவைத் தலைவர் மருதன், வி.கே.ஆர்.விக்னேஷ், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், எழும்பூர் சி. ரமேஷ், பன்னீர் செல்வம், கி.புஷ்பராஜ், அசினா பேகம், பாலாஜி அன்புமணி, கோமகன், தன பிரபா, கலா, கவிதா, தர்மதுரை, அமரசேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 17 மற்றும் 18ஆம் தேதிகளில் பெய்த அதி கனமழையின் காரணமாக மிகக் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டுள்ள ஏரல் வட்டம், திருக்களூர், உடையார் குளம் கிராமங்களில் நேற்று முன்தினம் (29.12.2023) நேரில் ஆய்வு மேற்கொண்டு, பொதுமக்களுக்கு நிவாரணத்தொகையினை வழங்கினார். உடன், திருக்களூர் ஊராட்சி மன்றத் தலைவர் பிரபஞ்சன், கூட்டுறவு சங்க மாவட்ட துணை பதிவாளர் ரவீந்திரன், வட்டாட்சியர் மலர்தேவன், கிராம நிர்வாக அலுவலர் கார்த்திக் ஆகியோர் உள்ளனர்.

இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி

நாள் : 31-12-2023 ஞாயிற்றுக்கிழமை



முன்னாள் காட்டாங்கொளத்தூர் ஒன்றிய கழக செயலாளர்
முன்னாள் நந்திவரம் – கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்ற தலைவர்
செயல் மறவர்
எம்.கே.தண்டபாணி
அவர்களின் நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர் மற்றும் கழகத்தினர்

காட்டாங்கொளத்தூர் ஒன்றிய தி.மு.க – நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர தி.மு.க
காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) முகாம் அலுவலகத்தில், முன்னாள் அமைச்சர் மறைந்த ஆலடி அருணா அவர்களின் மகன் ஆலடி எழில்வாணன் எழுதிய, “வியப்புரை – ஓர் இரசிகனின் பார்வை” என்ற ஆர்.பாலகிருஷ்ணன் எழுதிய “ஒரு பண்பாட்டின் பயணம் – சிந்து முதல் வைகை வரை” என்ற நூலின் கருத்தாக்க நூலினை வெளியிட்டார். உடன் நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, மாநில திட்டக்குழு துணைத் தலைவர் பேராசிரியர் ஜெ.ஜெயரஞ்சன், ஆர்.பாலகிருஷ்ணன், (ஓய்வு), ரோஜா முத்தையா நூலகத்தின் இயக்குநர் சுந்தர், எமரால்டு பதிப்பகத்தின் உரிமையாளர் கோ. ஒளிவண்ணன், நூலாசிரியர் ஆலடி எழில்வாணன், அருணன் ஆகியோர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் சுப்பையாபுரத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற கழகக் குழு துணைத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்கள் நிவாரணப் பொருட்களை வழங்கினார். உடன் அமைச்சர் கீதா ஜீவன் உள்ளார்.

### நாடாளுமன்றத் தேர்தலுக்கான பணிகளில் காங்கிரஸ் தீவிரம்!

# ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு!

## அடுத்த வாரம் பேச்சுவார்த்தை!

புதுடெல்லி, டிச. 31 -

நாடாளுமன்ற தேர்தலுக்கான பணிகளில் காங்கிரஸ் கட்சி தீவிரமாக உள்ள நிலையில், இந்தியா கூட்டணி கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு குறித்து அடுத்த வாரம் முதல், பேச்சுவார்த்தை நடத்த திட்டமிட்டுள்ளது.

நாடாளுமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நடத்த தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது. இந்நிலையில், நாடாளுமன்ற தேர்தலுக்கான பணிகளில் காங்கிரஸ் கட்சி தீவிரமாக உள்ளது.

மாநில கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி அமைப்பதற்காக முகுல் வாஸ்னிக் தலைமையில் காங்கிரஸ் ஐவர் குழுவை அமைத்துள்ளது. அந்த குழுவானது கடந்த 2 நாட்களாக மகாராஷ்டிரா, பீகார், மேற்கு வங்கம் உள்ளிட்ட மாநில காங்கிரஸ் நிர்வாகிகளுடன் ஆலோசனைகளை நடத்தியுள்ளது. ஜனவரி 4 ஆம் தேதி காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்கள், மாநில தலைவர்கள் கூட்டம் நடைபெறுகிறது. அதில் ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நிலை, எந்தெந்த கட்சிகளுடன் தொகுதி பங்கீடு செய்ய முடியும் என்பது உள்ளிட்ட அம்சங்கள் குறித்து ஆலோசனை நடத்தப்பட உள்ளது. அன்றைய தினம் ப. சிதம்பரம் தலைமையிலான தேர்தல் அறிக்கை குழு கூடி ஆலோசனை நடத்த உள்ளது. ஜனவரி 8 ஆம் தேதி ராகுல்காந்தி தொடங்க உள்ள நியாய பேரணியில் இலச்சினை, முழக்க வாசகம், பாடல் வெளியிட திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாநில வாரியாக தொகுதி உடன்பாடுகள் குறித்து இந்தியா கூட்டணி கட்சிகளுடன் ஆலோசனை நடத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

### திருநெல்வேலி – தூத்துக்குடி மாவட்ட மக்கள் அபராதமின்றி

# மின் கட்டணம் செலுத்த கால அவகாசம் நீட்டிப்பு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

சென்னை, டிச.31-

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு மின்கட்டணத்தை அபராதத்தொகை இல்லாமல் செலுத்த 02.01.2024 வரை வழங்கப்பட்ட கால அவகாசம் தற்போது கூடுதலாக 01.02.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து, நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:



கனமழையின் காரணமாக திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அதீத பாதிப்பினை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மின்நுகர்வோர்கள் தங்களது மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கீழ்க்கண்டவாறு கூடுதல் கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மின் உபயோகிப்பாளர்களின் மின்கட்டணம் செலுத்தும் கடைசி நாள் 18.12.2023 முதல் 02.01.2024 வரை இருந்த நிலையில், அபராதத் தொகை இல்லாமல் 01.02.2024 அன்று வரை மின் உபயோகிப்பாளர்கள் மின்கட்டணம் செலுத்த கூடுதல் காலநீட்டிப்பு வழங்கப்படுகிறது.

இந்த காலநீட்டிப்பு வீடு, வணிக பயன்பாடு, தொழிற்சாலைகள், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பிற மின்நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

### பக்தர்கள் நன்கொடை வழங்குவதை எளிதாக்கும் வகையில்

# விரைவுத் தகவல் குறியீடு மூலம் நன்கொடை செலுத்தும் வசதி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, டிச.31-

பக்தர்கள் நன்கொடை வழங்குவதை எளிதாக்கும் வகையில் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதி அறிமுகம் செய்து 7,233 திருக்கோயில்களுக்கு இணையவழி நன்கொடை செலுத்தும் வசதி விரிவாக்கத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று (30.12.2023) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களுக்கு பக்தர்கள் நன்கொடைகள் வழங்குவதை எளிதாக்கும் வகையில் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதியினை அறிமுகம் செய்து, 7,233 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள இணையவழி நன்கொடை செலுத்தும் வசதியினை தொடங்கி வைத்து, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தெய்வ திருவுருவப் படங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியினை வெளியிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

வளர்ந்து வரும் நாகரிகத்துக்கு ஏற்ப விரைவாக அனைத்து பணிகளையும் மேற்கொள்கின்ற வகையில் இணைய வழியாக திருக்கோயில்களுக்கு பக்தர்கள் நன்கொடை வழங்கும் வசதி இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் 2021 ஆம் ஆண்டு முதற்கட்டமாக 47 முதுநிலை திருக்கோயில்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் கடந்த 2 ஆண்டுகளில் சுமார் ரூ.5.61 கோடி நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றதால் இன்றைய தினம் 7,233 திருக்கோயில்களுக்கு இணையவழி நன்கொடை செலுத்தும் வசதி விரிவுப்படுத்தப்பட்டுள்ளதோடு, விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதியும் இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது நன்கொடை வழங்குபவர்கள் எந்தவித அலைக்கழிப்பிற்கும் ஆளாகாமல் அவர்கள் நினைத்த இடத்திலிருந்து திருக்கோயிலுக்கு நன்கொடை அளிப்பதற்கு பேருதவியாக இருக்கும். பக்தர்களும் இதனை மனமுவந்து வரவேற்பார்கள். நன்கொடை வழங்கியதற்கான ஒப்புகை, மின்னணு இரசீது மற்றும் அன்னதான நன்கொடைக்கான வருமான வரி சலுகை சான்றிதழ் ஆகியவை குறுஞ்செய்தி மூலம் நன்கொடையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். குறுஞ்செய்தியில் வரப்பெற்ற தகவலின் இணைப்பு மூலம் அதற்கான இரசீது மற்றும் சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 2024 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி (Calendar) வெளியிடப்பட்டுள்ளது. இந்த நாட்காட்டி அனைத்து அரசு அலுவலகங்களிலும் கட்டணமில்லாமல் வழங்கப்படுவதோடு, முதுநிலை திருக்கோயில்கள் உள்ளிட்ட அனைத்து திருக்கோயில்களிலும் ரூ.100 என்ற கட்டணத்தில் விற்பனை செய்யப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 1,224 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதேபோல் ரூ.5,550 கோடி மதிப்பிலான 6,048.30 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் நில மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் மாதந்தோறும் ஆணையர் அலுவலகத்தில் சீராய்வுக் கூட்டம் நடத்தப்படுகின்றது. அதேபோல் கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வரும் ரூ.2 லட்சம் நிதியுதவிக்கு சரக்கு மற்றும் சேவை வரி (GST) பிடித்தத்திலிருந்து விலக்கு பெறுவதற்கு துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவர்களை தொன்மையான திருக்கோயில்களுக்கு சுற்றுலா அழைத்து செல்வது குறித்த கோரிக்கை வரவேற்கத் தகுந்த ஆலோசனையாகும். பள்ளிகளில் அனைத்து மதத்தினரும் பயின்று வருவதால் அதற்கான சூழ்நிலையை பொறுத்து இதனை செயல்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஆங்கில புத்தாண்டு தினத்தன்று சிறப்பு வழிபாடு நடைபெறும் திருக்கோயில்களில் இந்தாண்டும் அவை வழக்கம்போல் நடைபெறும். ஒருசில திருக்கோயில்களில் நள்ளிரவு 12 மணிக்கும் சில திருக்கோயில்களில் அதிகாலையும் நடை திறக்கப்பட்டு வழிபாடு நடக்கும். அந்த நடைமுறைகளில் மாற்றங்கள் செய்திட இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் எவ்வித அழுத்தமும் தரமாட்டார்கள். வழக்கமான நடைமுறையே பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க. வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் நிலையிலான தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) திருமதி கோ.விஜயா, த.குமரேசன், திருமதி சு. ஜானகி, இணை ஆணையர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



விருகம்பாக்கம், 128வது வார்டில் 5000 குடும்பங்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்களை மாமன்ற உறுப்பினர் ரத்னா லோகேஷ்வரன் தலைமையில் பகுதிச் செயலாளரும், 129வது வார்டு மாமன்ற உறுப்பினருமான மு.ராசா, வட்டச் செயலாளர்கள் கோவிந்தராஜ், ராஜா ஆகியோர் முன்னிலையில் நிவாரணப் பொருட்களை சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா வழங்கினார். 128வது வார்டில் மிகக் கடுமையாக பாதிக்கப்பட்ட பகுதிகளான இந்திரா நகர், காந்தி நகர், சாதிக் பாட்சா நகர், ஷேக் அப்துல்லா, சிந்து தெரு, அம்பேத்கர் தெரு, யமுனா தெரு, கோதாவரி தெரு, கண்ணதாசன் நகர், தேவி கருமாரி அம்மன் கோவில் தெரு, செல்லி அம்மன் கோவில் தெரு, உள்ளிட்ட பகுதிகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது.

### மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிப்பு!

# தென் மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை!

## வருவாய் – பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் அறிவிப்பு!

சென்னை, டிச. 31-

தென் மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன் அறிக்கை விடுத்துள்ளார்.

அவ்வறிக்கை வருமாறு:-

மேற்கு மத்திய இந்திய பெருங்கடல் மற்றும் அதனை அடுத்துள்ள தென் கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் மேலடுக்கு காற்றழுத்த சுழற்சியின் காரணமாக அரபிக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகக் கூடும் என்றும், 29.12.2023 அன்று கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் தென்காசி மாவட்டங்களிலும், 01.01.2024 மற்றும் 02.01.2024 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் 29.12.2023 நாளிட்ட அறிவிக்கையில் தெரிவித்திருந்தது.

**அதி கனமழை (> 20.44 செ.மீ.)**

மணிமுத்தாறு மற்றும் பாபநாசம் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையின் காரணமாக தாமிரபரணி ஆற்றில் 7000 கனஅடி உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் 2.91 இலட்சம் நபர்களுக்கு எச்சரிக்கை குறுஞ்செய்திகள் அனுப்பப்பட்டுள்ளது. தாமிரபரணி



ஆற்றில் உபரிநீர் திறந்து விடப்பட்டுள்ளதால் பொதுமக்கள் ஆற்றில் குளிப்பதையும், வெள்ளநீர் செல்வதை வேடிக்கை பார்ப்பதையும், நீர்நிலைகளில் நின்று செல்பி எடுப்பதையும் தவிர்க்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.

மேலும், தென் மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரபிக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகியுள்ள நிலையில் மீனவர்களுக்கு பின்வருமாறு எச்சரிக்கை வழங்கப்பட்டுள்ளது.

- 31.12.2023 - குமரிக் கடல் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டியுள்ள மன்னார் வளைகுடா மற்றும் மாலத் தீவு பகுதிகளில் 40-55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.
- 01.01.2024 குமரிக்கடல் பகுதிகளில் காற்று 45-65 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும்.
- 02.01.2024 மற்றும் 03.01.2024 குமரிக்கடல் பகுதிகளில் 40-55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

எனவே, மீனவர்கள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் மீன் பிடிக்க கடலுக்கு செல்ல வேண்டாம் என்றும், மேற்சொன்ன பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தென் மாவட்டங்களுக்கு கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து, மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் 24 மணி நேரமும் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கேசவபிள்ளை பூங்கா நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடந்த நிகழ்வில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி மரக்கன்றுகளை நட்டு, பின்பு அக்குடியிருப்பு வளாகத்தில், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டி, சிறு கடைகள், சுற்றுச்சுவர், நடைபாதை ஆகியவை அமைத்தல் மற்றும் பழுதடைந்த குடிநீர்க் குழாய்களைச் சரி செய்தல் உள்ளிட்ட 3.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாட்டுப் பணிகளுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலடி அருணா

**டிசம்பர் 31 (2004)**



**தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக மூன்று முறையும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், தமிழக சட்டத்துறை அமைச்சராகவும், தி.மு.கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**“இளமைக் காலம் முதல் பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட பற்றும் உறுதியும்; அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகளால்கூட சேதாரமடையவில்லை” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை வடகிழக்கு மாவட்டம் தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் கால்பந்து போட்டி மற்றும் நல திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட செயலாளர் மாதவரம் சுதர்சனம் எம்எல்ஏ தலைமையில் செங்குன்றம் அடுத்த பாடியநல்லூரில் நடைபெற்றது. இதில் கழக விளையாட்டு மேம்பட்டு அணி மாநில செயலாளர் தயாநிதிமாறன் எம்பி கலந்துகொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மெடல் மற்றும் ரூபாய் 50 ஆயிரம் பரிசு தொகையை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர் மீ.வே.கருணாகரன், மாவட்ட அமைப்பாளர் சன் முனியாண்டி உள்பட நிர்வாகிகள் உள்ளனர்.



திருக்கோயில்களுக்கு பக்தர்கள் நன்கொடைகள் வழங்குவதை எளிதாக்கும் வகையில் விரைவுத் தகவல் குறியீடு (க்யூ ஆர்.கோடு) மூலம் நன்கொடை செலுத்தும் வசதியினை நேற்று (30.12.2023) ஆணையர் அலுவலகத்தில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிமுகம் செய்து வைத்து, 7,233 திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ள இணைய வழி நன்கொடை செலுத்தும் வசதியினை தொடங்கி வைத்தார். உடன் துறைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், துறை சிறப்புப் பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளிதரன், கூடுதல் ஆணையாளர் அ.சங்கர், ந.திருமகள், சிஹரிப்பிரியா மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் மாநகர பேருந்துகள் இன்று முதல் செயல்படும்!

# 6 போக்குவரத்துக் கழகங்கள் பொங்கலுக்குப் பிறகு இயக்கப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

சென்னை, டிச.31-

கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய திறப்பு விழாவிற்கு பிறகு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பத்திரிகை யாளர்களை சந்தித்து தெரிவித்ததாவது:-

கிளாம்பாக்கத்தில் அமைந்துள்ள “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்” இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மிகப்பெரிய பேருந்து முனையமாக இந்த பேருந்து முனையம் அனைத்து வசதிகளுடன் சி.எம்.டி.ஏ.வால் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயங்கிய பேருந்துகள் இனி எந்தந்த வகையில் இங்கிருந்து இயங்கும் என்பதை இந்த நேரத்திலே உங்களிடத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை இன்றைக்கு கோயம்பேட்டிலிருந்து இயங்குகின்ற பேருந்துகள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு வந்து தெற்கு பகுதிக்கு செல்லும். பெங்களூர், கிழக்கு கடற்கரை சாலைகளுக்கு செல்லும் பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து இயங்கும்.

அதேபோல தென் தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற பேருந்துகள் அத்தனையும், அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் முதல் பேருந்து நாளை காலை 4 மணி அளவிலே கோயம்பேட்டிற்கு வரும். அதற்குப் பிறகு வருகின்ற அத்தனை பேருந்துகளும் கிளாம்பாக்கம் பேருந்து முனை யத்திற்கு தான் வரும். கோயம்பேட்டிற்கு செல்லாது. எனவே, அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை முழுமையாக நாளையிலிருந்து கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து இயங்கும்.

சாதாரண நாட்களில் 300 புறப்பாடுகளும், வார இறுதி நாட்களில் 360 புறப்பாடுகள் கொண்ட அரசு விரைவு போக்குவரத்து கழகத்தினுடைய பேருந்துகள் அத்தனையும் கிளாம்பாக்கத்திலிருந்து இயங்கும்.



அதேபோல, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படும் பேருந்துகள் டிசம்பர் 31-ஆம் தேதி காலையிலிருந்து சென்னையின் எல்லா பகுதிகளுக்கும் கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும். ஏற்கனவே உள்ள வழித்தடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிற பேருந்துகளை தாண்டி, கூடுதலாகவும் பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

மாநகர போக்குவரத்துக் கழகத்தை பொறுத்தவரை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு இங்கிருந்து (கிளாம்பாக்கம்) 270 நடைகள் இயக்கப்படும். ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து இங்கிருந்து கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு செல்லும்.

அதேபோல தாம்பரம் செல்கின்ற பேருந்துகள் 2 நிமிடத்திற்கு ஒரு பேருந்து கிளாம்பாக்கத்திலிருந்து தாம்பரத்திற்கு புறப்படும். இங்கிருந்து (கிளாம்பாக்கம்) கிண்டிக்கு செல்லும் மாநகர போக்குவரத்து பேருந்துகள் மூன்று நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்று இயக்கப்படும். ஏற்கனவே இந்த வழித்தடத்தில் 2386 நடை பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது கூடுதலாக 1691 நடை பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது. எனவே, மொத்தம் 4077 நடைகள் கிளாம்பாக்கத்தின் இந்த வழித்தடத்திலே இயக்கப்படும்.

அதேபோல, இந்த அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அல்லாத மற்ற ஆறு போக்குவரத்து கழகங்கள் விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு அரசு போக்குவரத்து கழகங்களுடைய பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து கிளாம்பாக்கம் வந்து அந்தந்த வழித்தடத்தில் இயங்கும். பொங்கல் வரை இந்த நிலை நீடிக்கும்.

பொங்கலுக்கு பிறகு அந்த அத்தனை பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்து தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு இயக்கப்படும். 1,140 புறப்பாடுகள் பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து கிளாம்பாக்கம் வழியாக இயக்கப்படும்.

அதேபோல ஆம்னி பேருந்துகள் இன்றைக்கு கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து தங்களுடைய செயல்பாட்டினை தொடங்கிவிட்டார்கள். ஏற்கனவே அவர்களுக்கு டிக்கெட் புக்கிங் ஆகியுள்ள தன் காரணத்தால், பொங்கல் வரை சென்னை நகரத்திலிருந்து இயக்கப்படும். பொங்கலுக்கு பிறகு முழுமையாக கிளாம்பாக்கத்திலிருந்து அந்த ஆம்னி பேருந்துகள் இயக்கப்படும்.

எனவே, அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை நாளையிலிருந்தே முழுமையான செயல்பாடு இங்கிருந்து தொடங்கும். மாநகர போக்குவரத்து கழகம் நாளை காலையிலிருந்து இங்கிருந்து சென்னை மாநகரத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகள் இயக்கப்படும். அரசு போக்குவரத்து கழகத்தின் மற்ற ஆறு போக்குவரத்து கழகங்கள் பொங்கல் வரை கிளாம்பாக்கம் வழியாக செல்பவை, பொங்கலுக்கு பிறகு முழுமையாக கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும். அதேபோல ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்திலிருந்து முழுமையாக இயக்கப்படும்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

மாமன்ற உறுப்பினர் மகேஷ்வரி முருகவேல் மேம்பாட்டு நிதியில்

# வேளச்சேரி 175 வது வார்டில் மின் கோபுரம்!

## இரா.துரைராஜ் - அரிமா சு.சேகர் தொடங்கி வைத்தனர்

சென்னை, டிச. 31 -

வேளச்சேரி மேற்குப் பகுதி 175-வது வார்டு உறுப்பினர் மகேஷ்வரி முருகவேல் மேம்பாட்டு நிதியில் மக்களின் கோரிக்கையை ஏற்று அமைக்கப்பட்ட மின் கோபுரத்தை பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலையில் மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் தொடங்கி வைத்தார்.

சென்னை மாநகராட்சி 13 வது மண்டலம் 175 வது வார்டுக்கு உட்பட்ட கக்கன் பாலம் அருகில் அதிக மக்கள் நடமாட்டமும், வாகனங்கள் அதிகம் செல்லும் இடத்தில் நீண்ட காலமாக இருண்டு கிடந்தது, இந்நிலையில் மக்கள் கோரிக்கையை ஏற்று 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஷ்வரி முருகவேல் மேம்பாட்டு நிதியில் (ஹைமாஸ் லைட்) மின் கோபுரம் அமைக்கப்பட்டு இருந்தது. வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலையில், மண்டலக் குழுத் தலைவர் இரா. துரைராஜ் மின்கோபுரத்தை மக்கள் பயன்பாட்டிறக்கு இயக்கி வைத்தார்.

இந்நகிழ்ச்சியில் 176 வது வட்டக்கழக செயலாளர் எஸ்.முருகவேல், 175 வட்டக் கழக செயலாளர் பாரதிதாசன், 175 அ வட்டக்கழக செயலாளர் வி. சக்திவேல் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் கே.ஆர்.பி. பாண்டியன் , சீத்தாபதி உள்ளிட்ட பகுதி, நிர்வாகிகள், மவாட்டப் பிரதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், வட்ட நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கு பெற்று நிகழ்வை சிறப்பித்தனர்.



சென்னை மாநகராட்சி 13 வது மண்டலம் 175 வது வார்டுக்கு உட்பட்ட கக்கன் பாலம் சாஸ்திரி நகர் அருகில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று 175வது வார்டு மாமன்ற உறுப்பினர் மகேஷ்வரி முருகவேல் மேம்பாட்டு நிதியில் (ஹைமாஸ் லைட்) மின்கோபுரம் அமைக்கப்பட்டு இருந்தது. வேளச்சேரி மேற்கு பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர் முன்னிலையில் மண்டலக் குழுத் தலைவர் இரா.துரைராஜ் மின்கோபுரத்தை மக்கள் பயன்பாட்டிறக்கு திறந்து வைத்தார். உடன் 176 வது வட்டக்கழக செயலாளர் எஸ்.முருகவேல், 175 வட்டக் கழக செயலாளர் பாரதி தாசன், 175 அ வட்டக்கழக செயலாளர் வி.சக்திவேல் மற்றும் மாவட்டக் கழகப் பிரதிநிதிகள் கே.ஆர்.பி. பாண்டியன் , சீத்தாபதி மற்றும் கழக நிர்வாகிகள் பெருந்திரளாக பங்கு பெற்று நிகழ்வை சிறப்பித்தனர்.

கடந்த 2 மாதங்களில் 21.80 லட்சம் பேர் பயனடைந்தனர்!

# தமிழ்நாடு முழுவதும் இதுவரை 43,432 மருத்துவ முகாம்கள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி!

சென்னை, டிச.31-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு முழுவதும் இதுவரை 43,432 மருத்துவ முகாம்கள் கடந்த 2 மாதங்களில் நடத்தப்பட்டு 21.80 இலட்சம் பொதுமக்கள் பயன்பெற்றுள்ளனர் என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (30.12.2023) சென்னை, அடையாறு, தரமணி 100 அடி சாலையில் நடைபெற்ற மழைக்கால சிறப்பு மருத்துவ முகாமினைத் தொடங்கி வைத்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்ததாவது :

### மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்!

ஒவ்வொரு பருவ மழைக்கு பின்னரும், பெரிய அளவிலான மழை நோய் பாதிப்பு ஏற்படுவது வழக்கும், அந்த வகையில் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, வடகிழக்கு பருவ மழை தொடங்கியதுமே, குறிப்பாக அக்டோபர் திங்கள் 29 ஆம் தேதியில் இருந்து, வாரத்திற்கு 1000 முகாம்கள் திட்டமிடப்பட்டு, 10 வாரங்களில் 10,000 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த வகையில் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் இந்த முகாம்கள் நடைபெற தொடங்கியது. இன்று 10வது வாரமாக மழைக்கால சிறப்பு மருத்துவ



முகாம் நடத்தப்படுகிறது. இதுவரை 23,315 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. டெங்கு, மலேரியா, சிக்கன் குனியா போன்ற காய்ச்சல் பாதிப்புகளில் இருந்து, பொது மக்களை காக்க இந்த முகாம்கள் பயன் தந்துள்ளது. மேலும், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் மிக்ஜாம் புயலின் பாதிப்புகளில் இருந்து பொது மக்களை காக்க, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சிறப்பு மருத்துவ முகாம்கள் ஒரு வாரமாக நடைபெற்றது. அந்த வகையில் 13,482 முகாம்கள் நடத்தப்பட்டது. தொடர்ந்து அதிகன மழை பொழிவால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, தென்காசி ஆகிய 4 மாவட்டங்களிலும், 17.12.2023 அன்று முதல் நேற்று வரை 6,635 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. ஆக மொத்தம் தமிழ்நாடு முழுவதும் இதுவரை 43,432 மருத்துவ முகாம்கள் கடந்த 2 மாதங்களாக நடத்தப்பட்டு 21,79,991 பொது மக்கள் பயம்பெற்றுள்ளனர். மருத்துவத்துறை வரலாற்றில் இது மிகப்பெரிய சாதனையாகும்.

### கொரோனா JN.1.1

தமிழ்நாட்டில் JN.1.1 வைரஸ் பாதிப்புகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் நேற்று தமிழ்நாட்டில் 45 பேரும், சென்னை மாவட்டத்தில் மட்டும் 25 பேரும், JN.1.1 வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### டெங்கு

முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கையின் விளைவாக, டெங்கு பாதிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதுவரை 8953 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இது கடந்த காலங்களில் ஏற்பட்ட சராசரி பாதிப்புகளை விட குறைவாகும். எனவே பொதுமக்கள் டெங்கு குறித்து பெரிய அளவில் அச்சம் கொள்ள தேவையில்லை.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.



திருத்தணி வட்டம் கார்த்திகேயபுரம் நேதாஜி நகரைச் சேர்ந்த உடல் உறுப்பு தானம் செய்த திருமதி நாகரத்தினம் உடலுக்கு திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. , மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிரபுசங்கர் ஆகியோர் மாவட்டம் நிர்வாகம் சார்பில் அரசு சார்பில் மலர் வளையம் வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர். உடன் ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, மாவட்ட பிரதிநிதி ஷெரீப், அசோக்குமார் உள்பட பலர் உள்ளனர்

### மெரினாவில் இன்று இரவு 8 மணிக்கு மேல் வாகனங்கள் செல்ல தடை!

காவல் துறை அறிவிப்பு!

சென்னை, டிச.31

சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் தெற்கு கூடுதல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, வடக்கு கூடுதல் ஆணையர் அஸ்ரா கர்க் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தனர்.

அப்போது அவர்கள் கூறியதாவது:-

சென்னை மெரினாவில் இன்று இரவு 8 மணிக்கு மேல் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படுகிறது.

இரவு 1 மணிக்குள் புத்தாண்டு கொண்டாட்டத்தை முடித்துக்கொள்ள வேண்டும்

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்து கட்டுப்பாட்டு அறைக்கு வரும் தகவலின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்.

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவோர், சாலைகளில் சாகசங்களில் ஈடுபடுவோரின் ஓட்டுனர் உரிமம் பறிமுதல் செய்யப்படும்.

புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கடற்கரை பகுதிகளில் மது குடிக்க அனுமதி கிடையாது என தெரிவித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.கே. தண்டபாணி

### டிசம்பர் 31 (2021)



1969ஆம் ஆண்டில் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

1972ஆம் ஆண்டில் கிளை பிரதிநிதியாக பொறுப்பு வகித்து, மாவட்டக் கழகப் பிரதிநிதியாகவும் – காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட துணைச் செயலாளராகவும் –1991 முதல் மறையும் காலம் வரையிலான 25 ஆண்டுகள் தொடர்ந்து காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்தவர்.

1986, 1996, 2006, 2011 ஆகிய நான்கு முறை, நந்திவரம் கூடுவாஞ்சேரி பேரூராட்சி மன்றத் தலைவராக போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர். கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்

தி.மு.க.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 393.74 கோடி ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப் பெரிய பேருந்து முனையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (30.12.2023) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 393.74 கோடி ரூபாய் செலவில் செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள இந்தியாவின் மிகப் பெரிய பேருந்து முனையங்களுள் ஒன்றான “கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை” திறந்து வைத்து, அங்கு நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், கழகப் பொருளாளர் – நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சரும், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (30.12.2023) முகாம் அலுவலகத்தில், DMart நிறுவனத்தின் முதன்மை செயல்பாட்டு அலுவலர் பாஸ்கரன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, DMart நிறுவனத்தின் பொது மேலாளர்கள் குமாரவேல், ஜிக்னேஷ் ஷா, துணை பொது மேலாளர் ராஜு, ஆலோசகர் செந்தில் ஆகியோர் உள்ளனர்.

# குஜராத்தில் போதைப்பொருள் பயன்பாடு மிகப்பெரிய அளவில் அதிகரிப்பு!

## வெளிச்சத்திற்கு வந்த அதிர்ச்சித் தகவல்!

காந்திநகர், டிச. 31–

ஒன்றிய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் கீழ் வெளியான புள்ளிவிவரங்களின்படி, கடந்த 5 ஆண்டுகளில், பா.ஜ.க. ஆளும் குஜராத்தில் மாநிலத்தில் போதைப்பொருள் பயன்பாடு மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2018 முதல் 2022 ஆண்டு வரை, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில், குஜராத்தில் மட்டும் கஞ்சா, கோகைன் உள்பட மொத்தம் 93 ஆயிரத்து 691 கிலோ போதைப்பொருட்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. குறிப்பாக 2022 ஆம் ஆண்டு, நாடு முழுவதும் 71 கிலோ கோகைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது. அதில், 39 கிலோ குஜராத்தில் மட்டுமே கைப் பற்றப்பட்டுள்ளது.

இதேபோல், போதைப்பொருள் பழக்கத்திற்கு அடிமையாளர்கள் எண்ணிக்கையும் குஜராத்தில்தான் மிக அதிகமாக இருக்கும் அதிர்ச்சித் தகவலும் வெளியாகி உள்ளது. 19 லட்சத்து 20 ஆயிரம் குஜராத் மக்கள் போதைக்கு அடிமையாகி உள்ளனர். அதில், 17 லட்சத்து 35 ஆயிரம் பேர் ஆண்கள் ஆவர். குஜராத்தில் ஒரு லட்சத்து 85 ஆயிரம் பெண்கள் போதைப்பொருளுக்கு அடிமையாகி இருப்பதும் புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.






சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் டிசம்பர் முதல் வாரத்தில் பெய்த கனமழையால், பல்வேறு இடங்களில் வெள்ள பாதிப்புகளை ஏற்படுத்தியது. அத்தகையப் பேரிடர் நேரத்தில், மக்களை காத்திட அரசுடன் கைகோர்த்து களத்தில் இறங்கி மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொண்ட தன்னார்வலர்களை நேற்று நேரில் சந்தித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.




# கலைஞரும் நானும் 51

**“கலைஞர் என் வாழ்க்கையின் பாதையை மாற்றி அமைத்தவர். ஒரு சின்னவட்டத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்த என்னை, அரசியல் என்கிற பெரிய களத்துக்குக் கொண்டு வந்தவர். அவர் பெயரால் விருது பெற்று, அவர் கையால் ‘இயல் இசை விருது’ வாங்கினேன். ஆனால், எல்லாவற்றையும் விட மிகப்பெரிய கவுரவம் கிடைத்தது...” என தனது நினைவுகளைப் பகிர்கிறார் கவிஞர், எழுத்தாளர் மனுஷ்யபுத்திரன்.**

■ கவிஞர் **மனுஷ்யபுத்திரன்**



## “கவுரவத்துக்குக் குறைவில்லாமல் பார்த்துக் கொள்வோம்!”

“கலைஞருடனான எனது அனுபவங்களில் பெரும்பகுதி, அவரது அரசியல் சிந்தனைகள் சார்ந்ததாக உள்ளன. அவர் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, எழுதிய முதல் தருணத்தை என்னால் மறக்க முடியாது.

2001 ஆம் ஆண்டில், ஜெயலலிதா அம்மையார் ஆட்சியின்போது, அவரது ஆணவமான போக்கினைச் சித்தரிக்கும் விதமாக ‘அரசி’ என்கிற தலைப்பில் கவிதை எழுதி இருந்தேன்.

எங்கு பார்த்தாலும் கண்காணிப்பு, எதிர்க்கட்சிகள் மீது அடக்குமுறை, வேட்டையாடும் முனைப்பு, அராஜகமாக இருந்தது. அந்த மாதிரியான சூழலில் வெளியான அந்தக் கவிதை பரவலாகப் பேசப்பட்டது. அந்தக் கவிதை வெளியான ஒரு வாரத்தில், ஜெயலலிதா ஆட்சியின் அராஜகத்தின் உச்சக்கட்டமாக கலைஞர் கைது செய்யப்பட்டார். சம்பவம் நிகழ்ந்து முடிந்த இரண்டு வாரங்களில், என் கவிதை வெளியான பத்திரிகைக்கு ஒரு வாசகர் கடிதம் வந்தது. அதை எழுதியது கலைஞர்.

‘மனுஷ்யபுத்திரனின் ‘அரசி’ கவிதைப் படித்தேன். அது படி‘தேன்’ என அவருக்கே உரிய பாணியில் கடிதம் எழுதி இருந்தார். அந்தக் கடிதத்தை அந்தத் தருணம் என் நினைவுகளை விட்டு அகலாது. ஏனென்றால், அப்போதெல்லாம் நான் பிரபலமான ஆள் கிடையாது. இலக்கியப் பத்திரிகைகள் தாண்டி என் எழுத்துகள் வந்ததில்லை.

முக்கியமாக, கலைஞர் குறித்த வியப்பூட்டும் செய்திகளில் அவரது வாசிப்பினைச் சொல்வார்கள். ஆனால், தமிழ்நாட்டில் இருக்கும் வேறு எந்த அரசியல்வாதியாவது சிற்றிதழ் வாசிப்புப் பழக்கம் கொண்டவராக இருப்பாரா என யோசிக்கையில், கலைஞரின் வாசிப்பு எப்பேர்ப்பட்டது என்கிற வியப்பு மேலிடும். அப்போது நான், அரசியல் களத்திலோ, ஊடகக் களத்திலோ இல்லை. ஓர் எழுத்தாளராக மட்டுமே அடையாளப்பட்டிருந்த என்னை, அவர் அறிந்து வைத்திருக்கிறார் என்பது எனக்கு நெகிழ்ச்சியாக இருந்தது.

### எதிர்க்குரலுக்கு ஆதரவு

‘நக்கீரன்’ இதழில் ‘எதிர்க்குரல்’ என தொடர் கட்டுரைகள் எழுதி வந்தேன். அந்தக் கட்டுரைகளை கலைஞர் விரும்பிப் படிக்கிறார் என நண்பர்கள் பலரும் என்னிடம் கூறி இருக்கின்றனர். அந்தக் கட்டுரைகளில் இருந்து எடுத்து ‘முரசொலி’யில் மேற்கோள் காட்டுவார் கலைஞர்.

யாருமே எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அது அவரைக் குறித்து நேரடியாக எழுதப்பட்டது அல்ல. எந்த வெகுஜன இதழிலும் வரவில்லை. குறிப்பாக, பெரும் அரசியல் இயக்கத்தின் தலைவர், ஒரு நெருக்கடியைச் சந்தித்திருந்த நேரத்தில் கவிதையை வாசித்துவிட்டு, கடிதம் எழுதுவதெல்லாம் நினைத்துப் பார்க்கவே முடியாதது. ஆனால், அந்தக் கவிதையைப் புரிந்துகொண்டு அவர் ஆற்றிய எதிர்வினை வியப்பானது. சமூகத்தின் எல்லா நிலைகளையும், எல்லா வெளிகளையும் கவனிப்பவராக அவர் இருந்தார் என்பதை, அதன் மூலம் நான் உணர்ந்துகொள்ளும் வாய்ப்பு அமைந்தது.

அதன்பின்னர், 2006-ஆம் ஆண்டில், சென்னை புத்தகக் கண்காட்சியின்போது, ‘பேட்டரி’ காரில் அரங்கங்களைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தார். ‘உயிர்மை’ அரங்கின் முன் அவரது கார் வந்து நின்றது. நான் அரங்கில் அவருக்கு முன் இருந்தேன். அப்போது கலைஞருடன் வந்திருந்த கவிஞர் வைரமுத்து, என்னை அறிமுகம் செய்தார். உடனே கலைஞர் அவர்கள் வைரமுத்து அவர்களிடம், ‘இவரை எனக்குத் தெரியாதா?’ என்றார்.



சவுதி அரேபியாவில் அளிக்கப்பட்ட ஒரு மரணதண்டனை குறித்து, நான் எழுதியதை, ‘முரசொலி’யில் பதிப்பித்தார். அதன் பின்னர் அந்தக் கட்டுரையின் வீச்சு வேறாக இருந்தது. அதற்கு அரசியல் தன்மை ஏறியது. அந்தக் கட்டுரைக்காக மத அடிப்படைவாதிகள் எனக்குக் கொலை மிரட்டல் எல்லாம் செய்தார்கள். கலைஞரின் ஒவ்வொரு சொல்லையும் தமிழ்நாடு எப்படி கவனிக்கிறது என்பதற்கு அந்தச் சம்பவம் உதாரணம்.

### ‘நெஞ்சுக்கு நீதி’ பேச்சு

அந்த நாட்களில் ஒரு நாள், நமது இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசி செய்து, “கலைஞர் அவர்களின் ‘நெஞ்சுக்கு நீதி’ 5-ஆம் பாகம் வெளியீட்டு விழா நடக்கிறது. அந்த நிகழ்ச்சியில் நீங்கள் பேச வேண்டும் என விரும்புகிறோம்’ எனக் கூறினார். எல்லோரும் சோர்வுற்றிருந்த நேரத்தில், கலைஞர் மட்டும் இயங்குகிறார். ஓர் எழுத்தாளராக என்னை அழைக்கிறார் என்கிறபோது அந்த உணர்வு வேறுவிதமாக இருந்தது.

அண்ணா அறிவாலயத்தில் வெளியீட்டுவிழா நிகழ்ச்சி. கலைஞர் முன்னால் முதல்முறையாகப் பேசப் போகிறேன் என்பதால், நிறைய குறிப்புகள் எடுத்தேன். ஆனால், மேடைக்குச் சென்றதும் குறிப்புகளை எல்லாம் வைத்துவிட்டு, என் மனதுக்குத் தோன்றியதைப் பேசினேன். அந்த உரை என் ஆழ்மனத்தில் இருந்து வெளியானதாக இருந்தது.

அன்றைக்கு முதல்நாள்தான் பத்தாம் வகுப்புக்கான தேர்வு முடிவுகள் வெளியாகி இருந்தன. அதுவரை இல்லாத வகையில் மாண வர்களின் தேர்ச்சி விகிதம் இருந்தது. அதற்கு காரணமாக கலைஞர் கொண்டு வந்த ‘சமச்சீர்க் கல்வித் திட்டம்’ இருந்தது என்பதைக் குறிப்பிட்டு நான் பேசினேன். ஏனென்றால், சமச்சீர்க் கல்வியின் முதல் தேர்வு முடிவு அது. அரங்கம் மொத்தமும் ஆர்ப்பரித்து மகிழ்ந்தது. கலைஞர் முகத்தில் ஒரு புன்முறுவலைப் பார்த்தேன்.

எனது உரையில் கடைசியாக, “கலைஞர் வாழ்க்கையில், ஒரு துரதிர்ஷ்டம் என்னவென்றால், தன் வாழ்நாளில் அவரது தகுதிக்குக் குறைவான ஆட்களுடன் அரசியல் செய்ய வேண்டி இருந்தது” எனக் கூறியதும் கலைஞர் வாய்விட்டுச் சிரித்தார். அந்தக் காட்சியை இன்றைக்கும் என்னால் மறக்க முடியாது.

**அப்போது வரை நான் கட்சி உறுப்பினர் ஆகவில்லை. கட்சி மேடைகளில் பேசியவனில்லை. ஆனால் கலைஞரின் அந்த கணிப்பு என்னை கட்சிமேடைகளில் ஏற்றிவிட்டது.**

அடுத்த நாள் ‘முரசொலி’யில் அந்த நிகழ்ச்சி குறித்து அவர் எழுதுகையில், ‘நண்பர் மனுஷ்ய புத்திரன் கையில் எந்தக் குறிப்பும் இல்லாமல் பேசுகிற திறனை நான் வியந்து பார்த்துக் கொண்டிருந்தேன்’ எனக் குறிப்பிட்டிருந்தார். நான் என்ன பேசினேன் என்பதைவிட எப்படிப் பேசினேன் என அவர் கவனித்தது முக்கியமானது.

எத்தனை பேச்சாளர்களை அவர் உருவாக்கி இருப்பார், அவரைப் பார்த்து எத்தனையோ பேச்சாளர்கள் உருவாகி இருப்பார்கள். மேடையில், ஒருவர் எப்படிப் பேசத் தொடங்குகிறார் என்பதை வைத்தே, அவரது ஆற்றலை கணிக்கக் கூடிய அவர், நான் எப்படிப் பேசினேன் எனக் குறிப்பிட்டது உள்ளபடியே எனக்கு உற்சாகத்தைக் கொடுத்திருந்தது. அப்போது வரை நான் கட்சி உறுப்பினர் ஆகவில்லை. கட்சி மேடைகளில் பேசியவனில்லை. ஆனால் கலைஞரின் அந்த கணிப்பு என்னை கட்சிமேடைகளில் ஏற்றிவிட்டது.

### இறுதி ஊர்வலக் கவிதை

அதன்பின்னர், கழகத்தில் இணைவதற்கான சூழல் ஏற்பட்டது. எனது விருப்பத்தையும் தெரிவித்தேன். நமது முதலமைச்சர் அவர்கள் அப்போது கலைஞரிடம் அழைத்துச் சென்றார். எனது கழக உறுப்பினர் அட்டையில் கலைஞர் கையெழுத்திட்டு அளித்த தருணம் எனக்குச் சிலிர்ப்பாக இருந்தது.

உறுப்பினர் அட்டையைக் கொடுத்துவிட்டு நிமிர்ந்து பார்த்தவர், “ஓர் எழுத்தாளர் கழகத்துக்கு வந்திருக்கீங்க, உங்க கவுரவத்துக்கு ஒரு குறையும் வராமல் நாங்க பார்த்துக்குவோம்” என்றார். அந்த வார்த்தைகள் எவ்வளவு உன்னதமானது, சத்தியமானது என்பதை இப்போது வரை நான் அனுபவித்து வருகிறேன். இன்னும் சொல்லப் போனால், எனக்கு புதிய புதிய கவுரவங்களையும் அளித்துள்ளது.

அவரது இறுதி ஊர்வலத்தில் நடந்து செல்ல வேண்டும் என ஆசைப்பட்டேன். ஆனால், அதற்குச் சாத்தியமாகவில்லை. அன்றிரவு ஒரு கவிதை எழுதி பதிவு செய்திருந்தேன். அடுத்த நாள், அனைத்து ஊடகங்களும் கலைஞரின் இறுதி ஊர்வலக் காட்சிகளை எனது கவிதையுடன் ஒளிபரப்பின. எனது எழுத்துகளே அவரிடம் என்னைச் சேர்த்தன. எழுத்துக்களே அவர் பின்னால் நடக்கவும் வைத்தன...!”

...பகிர்வார்கள்

## சாவர்க்கர் வாரிசுகளின் வாக்குமூலம்!



கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம் பாட்டுத்துறை அமைச்சரு மான உதயநிதி அவர்கள் சனாதனம் குறித்துப் பேசியபோது, ‘சனாதன தர்மத்தில் ஏற்றத் தாழ்வு என்பதே இல்லை’ என்று பா.ஜ.க.வினர் கூச்ச லிட்டனர். ஆனால், ஏற்றத் தாழ்வுகளால் நிரம்பியதே ‘சனாதனம்’ என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார் அசாம் பா.ஜ.க. முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா.

“பிராமணர், சத்ரியர், வைசியர் ஆகிய 3 வர்ணத்தாருக்கும் பணிவிடை செய்வதுதான் சூத்தி ரர்களின் வேலை” என ‘பகவத் கீதை’ சொல்வ தாக தனது X தளப் பக்கத்தில் அவர் பதிவிட்டிருந்தார். அவரது கட்சியினர் அதைக் கண்டிக்க வில்லை. எனினும், எதிர்க்கட்சிகளின் கடும் கண்டனங்களைத் தொடர்ந்து, அவசர அவசரமாக அந்தப் பதிவை நீக்கி விட்டு, ‘தனது ஊழியர், மொழிபெயர்ப்பில் தவறு செய்துவிட்டார்’ எனப் பகிரங்க மன்னிப்புக் கேட்டிருக்கிறார் ஹிமந்தா. சாவர்க்கர் வாரிசுதானே.. அப்படித்தான் இருப்பார்கள்..!

## :ப்ளாஷ்பேக்



### மாலையும் நிதியும்!



சுவாமிநாதன்

1967 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா தலைமையில் கழகம் முதன் முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்ந்தது. அவரது அமைச்சரவையில் முத்தமிழறிஞர் கலைஞர் பொதுப்பணித்துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்தார். அவர், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு வருகை தந்த போது சட்டமன்ற உறுப்பினர் ராஜமாணிக்கம் அவர்களோடு அவரி திடல் நேரு அரங்கில், மாலை அணிவித்து கட்சி நிதி வழங்கினேன்.

**-என்.சுவாமிநாதன், திருத்துறைப்பூண்டி, திருவாரூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகத்தின் தொழிற்சங்கங்கள்

**1953 ஆம் ஆண்டு, மே 31 ஆம் தேதி, அரக்கோணம் நகரில் தி.மு.கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில்தான் தொழிற்சங்கங்களில் தி.மு.கழகத் தோழர்கள் ஈடுபட்டு நடத்துவது எனத் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும் விதமாக தி.மு.கழகக் கிளைகள் ஆங்காங்கே தொழிற்சங்கங்களை நிறுவினர். கோவையில் திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர்கள் சங்கம், தூத்துக்குடியில் உப்பளத் தொழிலாளர்கள் சங்கம், அருப்புக்கோட்டை யில் நெசவாளர்கள் சங்கம், திருச்சியில் அச்சுத் தொழிலாளர்கள் சங்கம், வால்பாறையில் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் சங்கம் என அடுத்த 2 ஆண்டுகளில் கழகத்தின் தொழிற்சங்கங்கள் பல உருவாகின.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 345




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131